மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 956 முதல் 960 வரை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

குச்சிவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து சாராவி தயாரிக்கும் திட்டம்.

*வினா எண். 961.—டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குச்சிவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து எதில் ஆல்கஹால் (Ethyl Alcohol) தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) மத்திய அரசு அதற்கு அனுமதி அளித்து விட்டதா ?

(இ) ஆம் எனில், அந்தத் தொழிற்சாலை இராசிபுரத்தில் ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) and (இ) கேள்விக்கு இடம் இல்லை.

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம்.

*வினா எண். 962.—திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் தற்போது யார் பொறுப்பில் இயங்கி வருகிறது ?

(ஆ) அரசு இந்த நிறுவனத்தை ஏற்று நடத்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பில் இயங்கி வருகிறது.

(ஆ) உத்தேசம் ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS